பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 19 திங்கட்கிழமை 05.12.2022 கதிர் 30

### இனிது ரகசியம் அல்ல!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரும் 13ஆம் திகதி கூட்ட உத்தேசித்துள்ள சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும், பின்னரும் தமிழ்த் தேசியத் தரப்புகள் எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்-வெளிப்படுத்த வேண்டும் - என்பவை ☞ 2

# முதலில் தீர்வு அடங்கிய அரசமைப்பு வரட்டும் பின்பே உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு

## கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் வலியுறுத்து



கொழும்பு,டிசெ.05

மலையக மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் கட்சிகளுடன் தனித்தனியாக பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு தயாராகி வருவதாக அதன் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அரசாங்கம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவினை உருவாக்குவதற்கு பிரயத்தனம் செய்துவரும் நிலையில், தென்னாபிரிக்காவில் இடம்பெற்றது போன்று தமிழ் மக்களின் அபிலாகைளை பூர்த்தி செய்யும் வகையில் புதிய அரசமைப்பின் ஊடாக நிரந்தரமான தீர்வு ☞ 2

# சர்வகட்சிக் கூட்டத்தை 13 இல் நடத்தத் திட்டம்

## உரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு பிரதமரைப் பணித்தார் ஜனாதிபதி



**கொழும்பு,டிசம்பர்05**

**தேசியப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பது தொடர்பான தமது உத்தேசத் திட்டமான சர்வ கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தை வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்திருக்கின்றார்.**

**இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களைத் தொடர்பு கொண்டு அத்திகதியில் அந்தக் கூட்டத்தை நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்யுமாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை அவர் பணித்திருக்கின்றார்.** ☞ 2

## இலங்கைக்கு நெருக்கமாக நிலநடுக்கம்

இலங்கையின் கிழக்குக் கடற்கரையிலிருந்து 300 கிலோமீட்டர் தொலைவில் வங்காள விரிகுடாவில் நேற்று மாலை 4.3 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

இதனை இலங்கை புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்திய தேசிய மையத்தின் படி, இந்த நிலநடுக்கம் 21 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்தது.

## புத்தூரில் வாள்வெட்டு

யாழ். புத்தூர் சந்தியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்குள் புகுந்த வாள்வெட்டு கும்பல் நடத்திய தாக்குதலில் உரிமையாளர் படுகாயமடைந்த ☞ 2

## தாவடியில் வாள்வெட்டில் இருவர் காயம்

யாழ்ப்பாணம் - தாவடி மதுபான விற்பனை நிலையம் அருகே இரண்டு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் இருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தனர். ☞ 2

## வாள்களுடன் இணுவிலில் இளைஞர் கைது

இணுவில் கிழக்கு பகுதியில் இராணுவப் புலனாய்வு பிரிவினரால் இரண்டு வாள்களுடன் இணுவில் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் ☞ 2

# கடற்றொழில் அமைச்சர் சொல்லலாம்; அதிகாரிகளுக்கு எங்கு போனது மதி?

## கடற்றொழிலாளர்கள் சார்பில் இப்படிக் கேள்வி




(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,டிசெ.05

கடற்றொழில் அமைச்சர் சொல்லலாம். ஆனால் கடற்றொழில் அதிகாரிகளுக்கு எங்கு போனது மதி எனக் கேள்வியெழுப்பிய யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் ☞ 2

# என்ன செய்யப் போகிறது அரசு? எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி



'பிட்ச்' தரப்படுத்தல் நிறுவனம் இலங்கையின் நீண்டகால உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு மிகவும் அபாயகரமான நிலையிலுள்ளதாக வகைப்படுத்தியுள்ளதாகவும், இந்த அவதானம் குறித்து 2020 ஆம் ஆண்டு முதலே எதிர்க்கட்சியாக சுட்டிக்காட்டிய போதிலும் அப்போதைய ஆட்சியாளர்கள் அதனை கேலி செய்து ☞ 11

## கடற்றொழில் சமூகத்தில் இருந்தே பிரதிநிதிகளை நாடாளுமன்றுக்கு அனுப்புவதே இனிமேல் வழியாம்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,டிசெ.05

கடலட்டை பண்ணை விடயத்தில் மக்கள் பிரதிநிதிகள் தொடர்ந்தும் மௌனம் காத்தால் இனிவரும் காலங்களில் கடற்றொழில் சமூகத்தில் இருந்து பிரதிநிதிகளை நேரடியாக நாடாளுமன்றுக்கு அனுப்பவேண்டி வரும் என ☞ 11

## பிறந்தநாளுக்கு நள்ளிரவில் நடுவீதியில் கேக் வெட்டிய 10 பேர் விளக்கமறியலில்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிசெ.05

தெல்லிப்பளை வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியின் கடமைக்கு இடையூறு விளைவித்து, வீதியில் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடிய குற்றச்சாட்டில் கைதான 10 இளைஞர்களையும் விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. ☞ 11



# கூட்டமைப்பின் சேர்ந்து பேசிச் செயற்படும் நிலைப்பாட்டை மனோவும் வரவேற்கின்றார்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.05

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் அனைத்து கட்சிகளுடன் பேச விரும்புகிறேன் என கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் விடுத்த அழைப்பை நாம் கவனத்தில் எடுத்துள்ளோம். இந்நிலையில் ஜனாதிபதியின் அழைப்பு தொடர்பில் மலையக, முஸ்லிம் கட்சிகளுடன் கலந்துரையாட விரும்புவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் நண்பர் சுமந்திரன் எம்.பி தெரிவித்துள்ளார். இதுபற்றி கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளின் தலைவர்களான நண்பர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., நண்பர் சித்தார்த்தன் எம்.பி. ஆகியோரும் என்னிடம் உரையாடி உள்ளனர். தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்.பிகளின் ☞ 11



காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் ஆராய்வதற்கான பொது நிலைப்பட்ட கூட்டம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கின்றது.

வரும் ஞாயிற்றுக்கிழமை 11ஆம் திகதி மாலை 6 மணிக்கு இந்தக் கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்துள்ளார் தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன்.

பெரும்பாலும் முக்கிய தமிழ் கட்சிகளின் தலைவர்கள் எல்லோரும் - மாவை சேனாதிராஜா, நீதியரசர் சீ.வி. விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் போன்றோர் இந்தச் சந்திப்பில் பங்கு கொள்ள இணக்கம் தெரிவித்திருக்கின்றனர் எனத் தெரிகின்றது. சிவில் சமூகப் பிரதிநிதிகள், முக்கிய பக்தி எழுத்தாளர்கள், சமயப் பிரதிநிதிகள் எனத் தமிழ்த் தேசியப் பரப்பில் அக்கறை உள்ள தரப்புகளும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுவர் எனக் கூறப்பட்டது.

அன்றைய தினம் காலையில் வவுனியாவில் நடைபெறும் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் பங்குபற்றி விட்டு நேரடியாக அங்கிருந்து இந்தக் கூட்டத்துக்கு மாவை சேனாதிராஜாவும், சுமந்திரனும் நேரத்துக்கு வந்து சேர்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னிலங்கை அரசுடன் இடம்பெறும் காய் நகர்த்தல்கள் தொடர்பில் பின்பற்ற வேண்டிய முறைமை, அதில் பலதரப்பு ஈடுபாடு, பொது நிலைப்பாடு போன்ற பல விடயங்கள் குறித்துக் கருத்துப் பரிமாறும் ஒன்று கூடலாக இந்த சந்திப்பு நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்கால தந்திரோபாய நகர்வுகள் குறித்து இந்தக் கூட்டத்தில் காத்திரமான முடிவுகள், இணக்கங்கள் எட்டப்பட்டால் நல்லது. நடக்குமா பார்ப்போம்...!

***

மாகாண சபைகளின் நியதிச் சட்டமாக்கல் நியாயாதிக்கத்தை ஜனாதிபதியின் பிரதிநிதியான வடக்கு மாகாண ஆளுநர் பலவந்தமாகப் பிடுங்கி கொண்டுள்ளார்.

இது முதலில் - அரசமைப்புக்கு முரணான நடவடிக்கை; சட்டவிரோத செயற்பாடு.

அடுத்து - மாகாணங்களுக்குப் பகிரப்பட்ட அதிகாரத்தை நிறைவேற்றதிகார ஜனாதிபதி தனது பிரதிநிதி மூலம் சட்ட விரோதமாகப் பிடுங்கிக் கொள்ளும் மிக மோசமான நடவடிக்கை.

அந்த வகையில் இந்த ஆளுநரின் நடவடிக்கை பெரும் சட்ட அடாவடித்தனம்.

தமிழ்த் தேசியப் பரப்பிலே மிக மோசமான நடவடிக்கையாக கருதப்பட வேண்டிய இதனை தமிழர் தரப்பில் சி.வீ.கே.சிவஞானம், சுமந்திரன் தவிர, மற்ற தமிழ்த் தேசிய தலைவர்கள் எல்லோரும் - நீதியரசர் விக்னேஸ்வரன் உட்பட - இது விடயத்தில் வாய் திறக்காமல், அதீத அமைதி பேணுகின்றனர். வாய்க்குள் கொழுக்கட்டை போல் வாயை மூடி மௌனம் காக்கின்றனர். காரணம் உண்டு. சந்தர்ப்பம் வரும்போது - பெரும்பாலும் மிக விரைவில் - அம்பலப்படுத்துவேன். பொறுத்திருக்குக...!

**- மின்னல் -**

## முதலில் தீர்வு அடங்கிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டதன் பின்னரே ஆணைக் குழுவை ஸ்தாபிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 12ஆம் திகதிக்கு பின்னர் தமிழ்த்தரப்புக்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார். இந்த அழைப்பு தொடர்பில் ஏற்கனவே தமிழ்த் தலைவர்கள், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் இல்லத்தில் கூடிப் பேசிவிட்ட நிலையில், அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து வருகின்றனர்.

அதேநேரம், இலங்கையில் உள்ள இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகளை களைவதற்காக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்த தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசவுடன் இந்த விடயம் சம்பந்தமாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விரிவான கலந்துரையாடலொன்றை நடத்தியிருந்தார்.

தொடர்ந்து, தென்னாபிரிக்காவின் துறை சார்ந்த நிபுணர்கள் குழுவொன்றுடன் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி கலந்துரையாடலில் ஈடுபட்டதோடு, சிவில் அமைப்பின் பிரதிநிதிகளையும் சந்தித்திருந்தார். அதனையடுத்து, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரியவும், குறித்த நிபுணர்கள் குழுவினரை சந்தித்திருந்தார். இந்த சந்திப்பில் சுமந்திரனும் பங்குபற்றியிருந்தார்.

இந்நிலையில் மேற்படி விடயங்கள் சம்பந்தமாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மலையக, முஸ்லிம் தரப்புக்களுடன் பேச்சு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான அழைப்பினை விடுத்துள்ளதோடு 12ஆம் திகதிக்குப் பின்னர் அப்பேச்சுக்களை ஆரம்பிப்பதாகவும் கூறியிருக்கின்றார்.

இவ்வாறான நிலையில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் இல்லத்தில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதோடு, மூன்று முக்கிய விடயங்களையும் முன்வைத்துள்ளனர்.

அவ்விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் உள்ளிட்ட அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. அதேபோன்று, பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கான காலம் இன்னமும் உறுதியாகவில்லை. இந்த நிலையில், அண்மைய நாள்களில் ஜனாதிபதி ரணிலின் செயற்பாடுகளில் எமக்கு சில சந்தேகங்கள் உள்ளன. இருப்பினும், எமது பக்கத்திலிருந்து பேச்சுக்காக கிடைத்த சந்தர்ப்பத்தினை வீணடித்தவர்கள் என்ற பழியை சுமப்பதற்கு தயாரில்லாத நிலையில் ஆயத்தங்களை முன்னெடுக்கின்றோம்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இறுதியாக அரசமைப்பு சபை உருவாக்கப்பட்டு தயாரித்த இடைக்கால அறிக்கை வரைவில் பல விடயங்கள் உள்ளன. ஆகவே, இதயசுத்தியுடன் அதற்கான பேச்சுக்களும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டால், ஓரிரு அமர்வுகளிலேயே இறுதித் தீர்வு வடிவத்தினை எட்டிவிடலாம். அது ஒருபுறம் இருக்கையில், நாம் எமது சகோதர இனங்களான மலையை மற்றும் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுடனும் பேச்சுக்களை மேற்கொள்ளவுள்ளோம். அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், விரைவில் அச்செயற்பாடு இடம்பெறவுள்ளது.

சர்வகட்சிகளின் அறிக்கையில், சமூக சபைகள் மற்றும் அவற்றுக்கான அதிகாரங்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. குறிப்பாக, கல்வி, கலாசாரம், சமயம் உள்ளிட்ட விடயங்கள் உள்ளன.

ஆகவே, அதிகாரப்பகிர்வு என்ற விடயம் சம்பந்தமான பேச்சுக்கள் இடம்பெறுவதாக இருந்தால், மலையக மற்றும் முஸ்லிம் கட்சிகளுடனும் மேற்படி விடயங்கள் சம்பந்தமாக இணக்கப்பாட்டை எட்ட வேண்டியுள்ளது.

உண்மைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஜனாதிபதி ரணிலின் தலைமையிலான அரசாங்கம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிப்பதற்கு பிரயத்தனம் செய்துவருகின்றது.

அவ்விதமானதொரு கலந்துரையாடலில் நானும் பங்கேற்றிருந்தேன். தென்னாபிரிக்காவின் நிபுணத்துவமானவர்கள் பிரசன்னமாகியிருந்தார்.

எவ்வாறாயினும், உண்மைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதனது அவசியமானதாக இருந்தாலும், அதற்கு முன்னதாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யவல்ல தீர்வொன்றை மையப்படுத்தி புதிய அரசமைப்பொன்றை உருவாக்க வேண்டும்.

அதன் பின்னரே, ஆணைக்குழுவினை ஸ்தாபிக்க வேண்டும். தென்னாபிரிக்காவிலும் அவ்வாறு தான் நடைபெற்றது. அங்கு முரண்பாடுகளின் பின்னர் இடைக்கால அரசமைப்பொன்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னரே தேர்தல் நடத்தப்பட்டது.

ஆகவே, தென்னாபிரிக்காவின் அனுபவங்களை அரசாங்கம் முறையாக பெற்றுக்கொள்ளுமாக இருந்தால், குறித்த விடயம் அரசாங்கத்துக்கு வெளிப்படுத்தப்படும். ஏனென்றால், தென்னாபிரிக்க தரப்பினர் எம்முடன் பேசும்போது, எதிர்கால பாதுகாப்பை உறுதிப்படுத்திய பின்னரே கடந்த காலம் பற்றிய உரையாடலை ஆரம்பிக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கியுள்ளனர்.

அந்தவகையில், தென்னாபிரிக்காவும் அரசாங்கத்துக்கு இணையான ஆலோசனையையும் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கும் என்றார்.

## சர்வகட்சிக் கூட்டத்தை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வெள்ளியன்று தம்மைச் சந்தித்த சிறுபான்மை இனத் தரப்பின் கட்சித் தலைவர் ஒருவரிடம் ஜனாதிபதியே நேரடியாக இத்தகவலை வெளியிட்டிருக்கின்றார் என்று அறிய வந்தது.

"கட்சித் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு, அவர்களின் வசதிகளையும் கணக்கெடுத்து, வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இந்தக் கூட்டத்தை கூட்டுமாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை கேட்டுள்ளேன். அவர் உரிய ஒழுங்குகளைச் செய்வார் என்று ஜனாதிபதி என்னிடம் கூறினார்" - என அக்கட்சித் தலைவர் காலைக்கதிருக்கு நேற்றுத் தகவல் வெளியிட்டார்.

இந்த வாரத்தில் வரவு - செலவுத் திட்ட விவாதம் மற்றும் அதன் மீதான வாக்கெடுப்பு முடித்த பின்னர், 11ஆம் திகதி தொடங்கும் வாரத்தில் இந்தக் கூட்டத்தை நடத்தலாம் என நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தமை தெரிந்ததே.

## புத்தூரில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு மின்வெட்டு நடைமுறையில் இருந்த நிலையில் இரு மோட்டார் சைக்கிள்களில் வந்த வாள் வெட்டு கும்பல் வர்த்தக நிலையத்திற்குள் புகுந்து வாள்வெட்டு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருக்கின்றது.

சம்பவத்தில் படுகாயமடைந்த 35 வயதான வர்த்தக நிலைய உரிமையாளர் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருக்கின்றார்.

## தாவடியில் வாள்வெட்டில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த சம்பவத்தில் காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கோண்டாவில் மற்றும் இணுவில் பகுதியைச் சேர்ந்த 34 மற்றும் 30 வயது மதிக்கத்தக்கவர்களே வாள்வெட்டுக்கு இலக்காகினர்.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## வாள்களுடன் இணுவிலில் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் 51ஆவது படைப்பிரிவில் இராணுவப் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து இன்றைய தினம் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் சுன்னாகம் பொலிஸார் இணைந்து நடத்திய தேடுதலின் போது கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைகளுக்காக சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## கடற்றொழில் அமைச்சர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்மேளன உபதலைவர் நா.வர்ணகுலசிங்கம், நாரா, நெக்டா நிறுவனங்கள் வடக்கில் காலூன்றிய பின்னர் வடபகுதி பகுதி கடற்றொழிலாளர்கள் பாரிய நெருக்கடியை சந்திக்கின்றனர் என்றார்.

கிளிநொச்சி மாவட்ட அரசியல்வாதிகள் கிராஞ்சி பகுதி மக்களுக்கு ஆறுதல் கூறி உரிய தீர்வுக்கு வழி செய்ய வேண்டும். கிராஞ்சியில் இரவிரவாக கடலட்டைப் பண்ணைகள் அளக்கப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்கள் சமாசங்கங்கள் என்பன இவ்விடயத்தில் மௌனமாக உள்ளன என்றார்.

யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடற்றொழில் அமைச்சர் சொல்லும் இடத்தில் கடலட்டை பண்ணை போடலாமா, இல்லையா என்பதை அதிகாரிகள் ஆய்வு செய்வதில்லையா என்ற கேள்வி எழுகிறது.

கடலட்டை பண்ணையை வழங்க வேண்டாமென நாம் கூறவில்லை. அதனை முதலாளி வர்க்கத்திற்கு வழங்காமல் சாதாரண கடற்றொழிலாளர்களுக்கு வழங்குங்கள். கடற்றொழிலாளர்கள் மீன்பிடிக்க செல்ல முடியவில்லை. வளங்களை அதிகரிக்க வேண்டிய நாரா, நெக்டா நிறுவனங்களே வளங்களை அழிக்கின்றன. கடற்றொழில் அமைச்சர் கூறிய விடயங்களே நடைமுறைப்படுத்தப் படவில்லை.

(11ஆம் பக்கம் பார்க்க)




காலைக்கதிர் Kalaikkathir

# இரவு நேரப் பொருளாதாரத்தின் மூலமே நாட்டை முன்னேற்றமடையச் செய்யலாம்!

## டயனா கமகே ஆலோசனை



கொழும்பு, டிசெ. 05

இரவு நேர பொருளாதாரத்திலேயே நாட்டுக்கு அதிக இலாபத்தை ஈட்டிக்கொள்ள முடியும். அதனால் சுற்றுலா பிரதேசங்களில் கடைத்தெருக்கள் 24 மணி நேரமும் திறக்கப்படவேண்டும். அத்துடன் வடக்கு கிழக்கிலும் சுற்றுலா துறைகள் இனம் காணப்பட்டு அபிவிருத்திசெய்ய நடவடிக்கை எடுப்போம் என சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் சுற்றாடல் அமைச்சு, வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு விடயதானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

கொவிட் மற்றும் பல்வேறு காரணங்களால் நாட்டின் சுற்றுலா துறை பாதிக்கப்பட்டிருந்தது. சுற்றுலா பயணிகளின் வருகையும் ஆரம்பத்தில் ஒரு லட்சத்து 95 ஆயிரமாக இருந்து தற்போது அது 6 லட்சத்து 90 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

டிசெம்பர் இறுதியாகும்போது சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இதன் மூலம் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வுகாண முடியும் என நம்புகின்றோம்.

அத்துடன் ஒரு நாட்டின் பொருளாதாரம் சுற்றுலா துறையிலேயே தங்கி இருக்கின்றது. எமது நாட்டைவிட பின்தங்கி இருந்த கிறீஸ் நாடு இன்று சுற்றுலாத்துறை காரணமாகவே முன்னேறி இருக்கின்றது.

அந்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நூற்றுக்கு 18 வீதம் சுற்றுலா துறை ஊடாகவே பெறப்படுகின்றது. அதேபோன்று அந்த நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 540 கோடி டொலர் ஆகும். அதனால் கிறீஸ் நாட்டை நாங்கள் முன்மாதிரியாகக்கொள்ள வேண்டும்.

மேலும் சுற்றுலா பிரதேசங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும். குறிப்பாக பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும்.

கடந்த காலங்களில் சுற்றுலா வந்த பெண்கள் பல்வேறு பாலிய துன்புறுத்தல்களுக்கு ஆளாகி இருக்கின்றனர். அதனால் சுற்றுலா பொலிஸ் பிரிவை அபிவிருத்தி செய்து, சுற்றுலா பிரயாணிகள் சுதந்திரமாகச் செயற்பட இடமளிக்கப்படவேண்டும்.

அதேநேரம் சுற்றுலா பிரதேசங்களின் கடைத்தெருக்கள் 24 மணி நேரமும் திறக்கப்படவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் சுற்றுலா பயணிகளிடமிருந்து டொலர்களை தேடிக்கொள்ள முடியாமல் போகும்.

குறிப்பாக இரவு களியாட்ட விடுதிகள் 24 மணி நேரம் திறக்கப்படவேண்டும். இரவு நேர பொருளாதாரம் மூலமே நாட்டின் பொருளாதாரத்தில் 70 வீதம் தங்கி இருக்கின்றது. பகல்நேர பொருளாதாரம் 30 வீதமே இருக்கின்றது. ஏனெனில் மதிய நேரத்திலே மக்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபடுகின்றனர்.

அதனால் இரவு பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகள் முன்னேற்றமடையக் காரணம் இரவு பொருளாதாரமாகும். இங்கிலாந்து கடந்த வருடம் இரவு பொருளாதாரம் மூலம் 660 கோடி ஸ்டேலின் பவுண்களை இலாபமீட்டி இருக்கின்றது.

அத்துடன் மக்கள் பொருள் கொள்வனவு செய்யும் இடங்கள் 24 மணி நேரமும் திறக்கப்படவேண்டும். அதன் மூலமே சுற்றுலா பயணிகளின் கைகளில் இருக்கும் டொலர்களை பெற்றுக்கொள்ள முடியும். இரவு 10 மணிக்குப் பின்னர் ஹோட்டல், மதுபான விடுதிகளை மூடிவிட்டு சுற்றுலாத்துறையை முன்னேற்றவும் முடியாது. நாட்டையும் முன்னேற்ற முடியாது.

அதேபோன்று வடக்கு கிழக்கில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்ய இருக்கின்றோம். 30 வருட யுத்தம் காரணமாக இதனை செய்ய முடியாமல் போனது. வடக்கு கிழக்கு எமது நாட்டின் ஒரு பகுதி. அங்கு வித்தியாசமான கலாசாரம் இருக்கின்றது. அதனால் அந்த பிரதேசங்களில் சுற்றுலாத்துறைக்கு பொருத்தமான இடங்கள் இருக் கின்றன. அந்த இடங்களையும் இனம் கண்டு அபிவிருத்தி செய்ய இருக்கின்றோம். – என்றார்.

# கையடக்கத் தொலைபேசிகளைக் கொள்வனவு செய்து மோசடி செய்த இளம் கணவன் மற்றும் மனைவி கைது!

மட்டக்களப்பு, டிசெ. 05

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேசத்தில் கையடக்க தொலைபேசிகளை கொள்வனவு செய்து மோசடியில் ஈடுபட்டு வந்த பொலன்னறுவையைச் சேர்ந்த இளம் கணவன் மனைவியை சனிக்கிழமை கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள 7 கையடக்க தொலைபேசி விற்பனை நிலையங்களுக்கு கணவன் மனைவி ஜோடியாக சென்று பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகளைக் கொள்வனவு செய்துகொண்டு அதற்கான பணத்தை இணையவழியாகப் பணபரிமாற்றம் செய்துள்ளனர் எனக் கூறி கையடக்க தொலைபேசியை வாங்கி கொண்டு மோசடியில் ஈடுபட்டுவந்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த கையடக்க தொலைபேசி நிலையங்களின் வங்கிகணக்குகளில் பணப்பரிமாற்றம் இடம்பெற்றிருக்கவில்லை. இது போலியான பணபரிமாற்றம் எனக் கண்டறிந்ததையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் பொலன்னறுவை கட்டின்வில பிரதேசத்தைச் சேர்ந்த 26 மற்றும் 21 வயதுடைய இளம் கணவன் மனைவி கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மோசடியாகக் கொள்வனவு செய்த தொலைபேசிகளை பொலன்னறுவை கல்வல பிரதேசத்திலுள்ள அவர்களது உறவினரின் கையடக்க தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு வழங்கிவந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள 7 கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையங்களில் இருந்தே கையடக்கத் தொலைபேசிகளை மோசடி செய்துள்ளனர் எனகைது செய்யப்பட்ட இவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, கல்முனை மூதூர் பிரதேசங்களில் இருந்தும் தொலைபேசி மோசடி தொடர்பில் பலர் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். இதில் கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ஹெரோயினுடன் ஒருவர் வாழைச்சேனையில் கைது!

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை பகுதியில் 42 வயது பெண்ணொருவர் சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு – களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்படி பெண் கைதுசெய்யப்பட்டு, அவரிடமிருந்து 8 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் ஒரு கிராம் 400 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்நிலையில் அந்தப் பெண்ணை வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த வாழைச்சேனை பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தனியார் ஊழியரின் சம்பளம் 21 ஆயிரமாக ரூபாவாக அதிகரிக்க இணங்கியும் ஏன் இதுவரை வர்த்தமானி வெளியிடப்படவில்லை?

## ஜோன் செனவிரத்ன கேள்வி



தனியார் ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை 21 ஆயிரம் ரூபாவாகஅதிகரிப்பதற்கு அனைத்து தரப்பினரும் இணக்கம் தெரிவித்திருந்தபோதும் இதுவரை அது வழங்கப்படுவதில்லை. அது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்படாமல் இருப்பதே அதற்குக் காரணமாகும்.

அதனால் வர்த்தமானி அறிவிப்பை விரைவாக வெளியிட நடவடிக்கை எடுக்கவேண்டும் என முன்னாள் தொழில் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

தொழில் அமைச்சில் கடந்த காலங்களில் பல்வேறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. என்றாலும் அவ்வாறு எடுக்கப்பட்ட தீர்மானங்களில் பல இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. குறிப்பாக தனியார் ஊழியர்களின் அடிப்படை சம்பளம் தொடர்பில் தீர்மானம் மேற்கொண்டோம்.

நான் தொழில் அமைச்சராக இருக்கும்போதுதான் 7 ஆயிரம் ரூபாவாக இருந்த தனியார் ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவாக மாற்றினோம்.

பின்னர் நிமல் சிறிபாலடி சில்வா அதனை 12 ஆயிரத்து 500 ரூபா வரை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தார். அதன் பிரகாரம் தற்போது தனியார் ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 16 ஆயிரம் வரை வழங்கப்படுகின்றது.

என்றாலும் நாட்டின் தற்போதைய வாழ்க்கைச் செலவு மற்றும் பொருளாதார நிலைமையைக் கருத்திற் கொண்டு தனியார் ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை 21 ஆயிரமாக நிர்ணயிக்க அண்மையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதனை மேற்கொள்ள அனைத்து தரப்பினரும் இணக்கம் தெரிவித்திருந்தனர். ஆனால் அதுதொடர்பான வர்த்தமானி அறிவிப்பு இதுவரை வெளியிடப்படவில்லை.

அதன் காரணமாக 21 ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளம் நடைமுறைக்கு வரவில்லை. அதனால் இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை விரைவாக வெளியிட தொழில் அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

என்றாலும் தொழிற்சங்கங்கள் தனியார் தொழிலாளர்களின் அடிப்படைச்சம்பளத்தை 24 ஆயிரம் ரூபாவாக அல்லது 26 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கவேண்டும் எனத் தெரிவித்து வருகின்றன.

என்றாலும் தற்போது இணக்கப்பாட்டுக்கு வந்திருக்கும் 21 ஆயிரம் ரூபாவாக தற்போதைக்கு வர்த்தமானி மூலம் அறிவிக்கவேண்டும். – என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பொறுமை காப்போம்

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பான தனது உத்தேசத் திட்டப்படி, நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்தை வரும் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கூட்டுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

எண் சோதிடர்கள் இந்தத் திகதியை நல்ல நாளாகக் கொள்வரோ தெரியாது. திகதியும் 13, கூட்டெண்ணும் (12.13.2022) கூட 13 தான்.

ஏற்கனவே அரசமைப்பு திருத்தத்தில் 13 வைத்துக் கொண்டு நாடும் நாமும் படும் பாடு பெரும்பாடு. இந்தச் சீத்துவத்தில் இன்னொரு முயற்சியை 13 இல் ஆரம்பிக்கின்றார் ரணில். உசிதமாகப் படவில்லை.

ஆனால் இந்த உத்தேசத் திட்டத்தில் சர்வ கட்சிக் கூட்டம் என்று அவர் கூறுகின்றாரே தவிர, அதற்கு அப்பால் தமது நிலைப்பாடு – இலக்கு – திட்டம் – யாது என்பதை அவர் கோடி காட்டுகின்றார் இல்லை. சீட்டு விளையாட்டில் சீட்டுகளை மற்றத் தரப்பாருக்குக் காட்டாமல், நெஞ்சுக்கு நெருக்கமாக வைத்து மறைத்து விளையாடுவது போல, ரணிலின் திட்ட நகர்வும் வலு இரகசியமாகவே உள்ளது. தனது உள்ளக் கிடக்கை அவர் கோடி காட்டுபவராகவும் கூட இல்லை.

“தேசியப் பிரச்சினை குறித்துப் பல்வேறு சந்தர்ப்பங்களில், விரிவாகவும் விளக்கமாகவும் பேசியாயிற்று. மேலும் காலம் இழுபடத் தேவையில்லை. இனிக் குறுகிய காலத்தில் தீர்வை எட்ட வேண்டியதுதான்” – என்ற சாரப்பட அவர் வெளிப்படுத்திய கருத்துக்குப் பல்வேறு விளக்கங்கள் – அர்த்தங்கள் – வியாக்கியானங்கள் – கூறப்படுகின்றன.

இன்றைய நிலையில் தமிழர் தரப்பு இரண்டு விடயங்களைக் கவனிக்க வேண்டும். அவற்றுக்கு ஏற்பதான் நடந்து கொள்ள வேண்டும்.

ஒன்று – பந்து இப்போது ஜனாதிபதியின் களத்தில்தான். அவர்தான் விளையாட வேண்டும். தமிழர் தரப்பு அல்ல. தமிழர் தரப்பு அவதிப்படவோ, முந்திக்கொண்டு பிரதிபலிப்புகளை காட்டவோ, ஆரவாரப்படவோ, அவசரப்படவோ தேவையில்லை. ‘நாம் ஒன்றுபட்டு வந்து பேசத் தயார். சமாதான முயற்சிகளில் ஈடுபட இணங்குகின்றோம்!’ – என்ற செய்தியைத் தெளிவாகக் காட்டியாயிற்று. அத்தோடு போதும். அதற்கு மேல் தமிழர் தரப்பு அதிகம் ஆரவாரம் காட்டுவது – இந்த முயற்சி குறித்து அதீத நம்பிக்கை வைத்து, அளவுக்கு மீறி பிரதிபலிப்பு செய்வது – அர்த்தமற்றது.

அடுத்தது – ஜனாதிபதியினதும் அவரது அரசினதும் உத்தேசத் திட்டம் என்னவென்பது தெளிவாக தெரியப்படுத்தப்படும் வரை தமிழர் தரப்பு அமைதி பேணி பொறுமை காத்திருப்பது நல்லது. Beat the gun அல்லது Jump the gun என்று ஆங்கிலத்தில் சொல்வது போல சூட்டை முந்திக்கொண்டு நாம் பாய (ஓட) ஆரம்பிக்கத் தேவையில்லை.

## புதிதாக இரு டிப்ளோமா கற்கைகள் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பம்!







வங்கியியலும், நிதியும் டிப்ளோமா மற்றும் தொழில்சார் ஆங்கில டிப்ளோமா ஆகிய இரு டிப்ளோமா கற்கைநெறிகள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தின் கீழ் நடத்தப்படவுள்ள இரு கற்கைநெறிகளினதும் அறிமுக நிகழ்வு கடந்த சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

இந்த அறிமுக நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கற்கை நெறிகளை ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம் நிமலதாசன், வங்கியலும் நிதியும் டிப்ளோமா கற்கைநெறி இணைப்பாளர் பேராசிரியர் திருமதி எல். கெங்காதரன், தொழில்சார் ஆங்கில டிப்ளோமா கற்கைநெறி இணைப்பாளர் கலாநிதி மு.சண்முகநாதன், பேரவை உறுப்பினர்கள், இலங்கை வங்கியின் உதவிப் பொது முகாமையாளர், வங்கிக் கிளைகளின் முகாமையாளர்கள், பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் கற்கை நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த கற்கைநெறிகளுக்கான வளவாளர்களாக அந்தந்த துறைகளில் தேர்ச்சி பெற்ற தொழில்சார் வல்லுனர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

சமூகத்தின் தேவையைச் செவ்வனே உணர்ந்து, அந்தச் சமூகப் பொறுப்பை நிறைவேற்றும் ஒரு செயற்பாடாக இந்த இரு டிப்ளோமா கற்கைகளையும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வின் போது உரையாற்றிய துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா, இந்தக் கற்கைநெறிகளின் முக்கியத்துவம், அதை எவ்வாறு சமூகப் பொறுப்புணர்வுடன் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது, கற்கைநெறிகளின் முடிவில் மாணவர்கள் பெறக் கூடிய நன்மைகள் என்பவற்றைக் குறித்துரைத்திருந்தார். நாட்டின் பொருளாதார நிலை, அதற்காக நாம் ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய பங்களிப்பு, பற்றியும் அவர் தனது உரையில் தெளிவுபடுத்தியிருந்தார்.

## அரசாங்க நிறுவனங்களின் இழப்புக்களை மக்கள்மீது சுமத்துவது பொருத்தமற்றது!

### என்கிறார் ரோஹித அபேகுணவர்தன



அரச நிறுவனங்களின் இழப்புக்களை மக்கள் மீது சுமத்துவது பொருத்தமற்றது. கடந்த 4 மாதங்களில் 100 கோடி ரூபா இலாப மீட்டியுள்ள இலங்கை மின்சார சபை இந்த சந்தர்ப்பத்தில் மின் கட்டணத்தை அதிகரிப்பது பொருத்தமற்றது.

எனவே, இந்தத் தீர்மானத்தைக் கைவிடுமாறு கோரிக்கை விடுப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2023ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்துக்கு பொதுஜன பெரமுன அதன் முழுமையான ஆதரவை வழங்கும். அதேபோன்று பெரும்பான்மை வாக்குகளை பெற்று, அதனை நிறைவேற்றுவதற்காக ஏனைய தரப்பினருடனும் கலந்துரையாடப்படும்.

தற்போது மீண்டும் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாம் ஆளுந்தரப்பினராக உள்ள போதிலும், மக்கள் சார்பாகவே செயற்படுவோம்.

கடந்த முறை மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டமை மக்களுக்கு பெரும் சுமையாக உள்ளது. அவ்வாறிருக்கையில், மீண்டும் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் அதனை மக்களால் தாங்கிக்கொள்ள முடியாது.

கடந்த ஓகஸ்ட் மாதம் மின் கட்டணம் அதிகரி க்கப்பட்டதன் பின்னர் இதுவரையில் இலங்கை மின்சார சபை 100 கோடி ரூபா இலாபம் ஈட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தில் மின் கட்டணத்தை அதிகரிப்பது பொருத்தமானதாக இருக்காது. அரசாங்கம் அதன் வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டுமெனில், அதனை வேறு வழிகளில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அரச நிறுவனங்களின் இழப்புக்களை மக்கள் மீது சுமத்துவது பொருத்தமற்றது. சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதன் மூலம் வருமானத்தை அதிகரித்துக்கொள்ளலாம்.

எனவே, பதாதைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு கூச்சலிட்டுக்கொண்டிருப்பவர்களிடம், சுற்றுலாத்துறையை பாதிக்கும் வகையில் செயற்பட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# குற்றமிழைத்தவர்களைத் தண்டிப்பதற்கான ஏற்பாடுகள் இல்லாத உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு குறித்து அரசு ஆர்வம்

## சண்டே ரைம்ஸ் தகவல்

கொழும்பு, டிசெ.05

குற்றமிழைத்தவர்களைத் தண்டிப்பதற்கான ஏற்பாடுகள் இல்லாத உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்துகின்றது என சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது

இது தொடர்பாக சண்டே ரைம்ஸ் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு –

2023 வரவு – செலவு திட்டத்தின் மீதான இறுதிவாக்கெடுப்பு முடிவடைந்த பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரு விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்தவுள்ளார்.

முதலாவது நல்லிணக்கத்துக்கான யோசனைகளை உருவாக்குவது.

இரண்டாவது அமைச்சரவையை விஸ்தரிப்பது, இந்த நடவடிக்கை வரவு – செலவுத் திட்ட விவாதங்கள் காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது.

நல்லிணக்க நடவடிக்கைகளுக்காக நாடாளுமன்றம் கூடும் என்றாலும் அதற்கான வழிமுறைகள் தொடர்பான விவரங்கள் தெளிவாகவில்லை.

எனினும் திங்கட்கிழமை வாராந்தர அமைச்சரவை கூட்டம் நீடிக்கப்படவுள்ளதுடன் இந்த செயல்முறை முன்னெடுக்கப்படவுள்ளது. குழுவொன்று இது தொடர்பான விடயங்கள் தொடர்பாக விவாதிக்கவுள்ளது.

உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பது முக்கியமான நடவடிக்கையாகக் காணப்படும் என கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

2018 இல் ரணில்விக்கிரமசிங்க நல்லாட்சி அரசாங்கத்தில் பிரதமராகப் பதவிவகித்தவேளை இந்த யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

அவ்வேளை கருத்து தெரிவித்திருந்த ரணில் விக்கிரமசிங்க மூன்று தசாப்தகால மோதலும் ஏனைய விடயங்களும் இலங்கை பொருளாதாரத்தின் மீது மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன எனத் தெரிவித்திருந்தார்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தென்னாபிரிக்காவின் மாதிரியை பின்பற்றியதாகக் காணப்படும் என்றாலும் இலங்கையில் அதனை எவ்வாறானதாக உருவாக்குவது என்பது தொடர்பாக இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

விசாரணையின் பின்னர் குற்றவாளிகள் என அடையாளம் காணப்பட்டவர்களைத் தண்டிப்பதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக சில தரப்பினர் விடுத்துள்ள கோரிக்கைகளால் சர்ச்சைகள் உருவாகியுள்ளன.

அவ்வாறான ஏற்பாடு இல்லாத ஆணைக்குழுவை அமைப்பது தொடர்பாக அரசாங்கம் ஆர்வம் காட்டுகின்றது, தற்போது பதவியில் இருக்கும் இராணுவ அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்படலாம் என்பதால் விசாரணையின் பின்னர் குற்றவாளிகள் என அடையாளம் காணப்பட்டவர்களைத் தண்டிப்பதற்கான ஏற்பாடுகள் இல்லாத ஆணைக்குழுவை அரசாங்கம் விரும்புகின்றது.

இதன் காரணமாக சுதந்திரதினத்துக்கு முன்னர் இந்த விடயங்களை நிறைவேற்றுவது என்ற அரசாங்கத்தின் அறிவிப்பு நிறைவேறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

# அவிசாவளை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரிக்கு இலஞ்சம் வழங்க முற்பட்டவர் கைது!

ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த வேண்டாம் எனக் கோரி, அவிசாவளை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரிக்கு இலஞ்சம் வழங்க முற்பட்ட ஒருவர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இலஞ்ச ஊழல் விசாரணை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவிசாவளை தல்துவ சந்தியில் பத்து கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 2 ஆயிரத்து 100 மில்லிகிராம் ஹெரோயினுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டபோது, அவரது நண்பர் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரியான பொலிஸ் பரிசோதகர் பி.ஜி.எஸ்.ஆர். சஞ்சீவவிடம் சென்று கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டாம் என்றும், தான் 50 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாக வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பொலிஸ் அதிகாரி சந்தேக நபரை மறுநாள் வருமாறு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பில் அந்தப் பொலிஸ் பரிசோதகர் பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு அறிவித்து அவர் ஊடாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கும் விடயத்தைக் கூறியுள்ளார்.

இதனையடுத்து பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு இலஞ்ச ஒழிப்புப் பிரிவினர் சென்றுள்ளனர். இதன்போது பொலிஸ் பரிசோதகர் சஞ்சீவவிடம் வந்த நபர், அவரிடம் தான் கூறிய தொகையில் முதல் கட்டமாக 25 ஆயிரம் ரூபாவை கொடுக்க முயற்சித்தபோது கைது செய்யப்பட்டுள்ளார்.

# மின்சார உபகரணங்களை திருடிய குற்றம்; இருவர் மொரட்டுவை பல்கலையில் கைது!

மொரட்டுவை பல்கலைக்கழக வளாகத்தின் விசேட பாதுகாப்பு கமராவை செயலிழக்கச் செய்து அமைப்பைப் புறக்கணித்து உள்ளே நுழைந்து அங்கிருந்த பெறுமதியான மின்சாதனங்கள் மற்றும் மின்விளக்குகளை திருடிய சந்தேக நபர்கள் இருவரைக் கைது செய்துள்ளோம் என மொரட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, சந்தேக நபர்கள் பாதுகாப்பு கமெராக்களை செயலிழக்கச் செய்து அங்குள்ள அறை ஒன்றுக்குள் பிரவேசித்துள்ளமை தெரிய வந்துள்ள தாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் கட்டுபெத்த பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என தெரிவித்த பொலிஸார், அவர்கள் அதிகளவு ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனவும் கூறினர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# உணவுப் பஞ்சத்தின் விளைவை சிலகாலத்தில் சுகாதாரக் குறிகாட்டிகளில் அவதானிக்கலாம்!

## வடக்கின் முன்னாள் சுகாதார அமைச்சர் வைத்தியர் ப. சத்தியலிங்கம் தெரிவிப்பு



வவுனியா, டிசெ. 05

உணவு பஞ்சத்தின் விளைவை இன்னும் சில காலத்தில் சுகாதாரக் குறிகாட்டிகளில் அவதானிக்கலாம் என தமிழரசுக் கட்சியின் செயலாளர் வைத்தியர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் பயனாளிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கி வைத்து உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் –

நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படும் எனப் பாதீடு தொடர்பாக நாடாளுமன்றத்தில் கதைக்கும் அரசியல்வாதிகளும் மற்றும் நிபுணர்களும் கூறுகின்றனர்.

ஆனால் ஏற்கனவே இந்த நாட்டில் உணவுப் பஞ்சம் வந்துவிட்டது. இதன் தாக்கம் இன்னும் சில நாள்களில் மோசமாகத் தெரியக்கூடிய வாய்ப்புள்ளது.

இதன்படி உணவு பணவீக்கம் 90 வீதமாக உள்ளது, உலகத்திலேயே உணவு பணவீக்கம் கூடிய நாடுகளில் இலங்கை 6 ஆவது இடத்தில் உள்ளது.

எனவே அரசாங்கம் நாட்டில் விவசாயம் தொடர்பான கொள்கை வகுப்பை மேற்கொள்ளும் போது அரசியலுக்காக இல்லாமல் மாவட்டங்களுக்கு ஏற்றவகையில் உருவாக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையிலுள்ள சீனத் தூதரகத்துக்கு மஹிந்த ராஜபக்ஷவும் விஜயம் செய்தார்!



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இலங்கையில் உள்ள சீனத் தூதரகத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை விஜயம் மேற்கொண்டு இருந்தார்.

சீனாவின் முன்னாள் ஜனாதிபதிக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையிலேயே இவர்கள் சீனத் தூதரகத்துக்குச் சென்றிருந்தனர்.

இதன்போது சீனத் தூதுவரை சந்தித்த மஹிந்த ராஜபக்ஷ தமது அனுதாபங்களை பகிர்ந்துக்கொண்டார்.

இதவேளை சீனாவின் முன்னாள் ஜனாதிபதி ஜியாங் ஸேமின் 1989 ஆம் ஆண்டு முதல் 2004ஆம் ஆண்டு வரை சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகக் கடமையாற்றிதோடு 1993 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை சீனாவின் ஜனாதிபதியாகவும் பதவி வகித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் சீனத்தூதரகம் சென்று சீனாவின் முன்னாள் ஜனாதிபதியின் மறைவுக்கு அஞ்சலித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திடீர் காலநிலை மாற்றத்தால் பாரிய மீன்கள் விற்பனை!



திடீர் காலநிலை மாற்றத்தால் அம்பாறை மாவட்டத்தில் பாரிய மீன்கள் பிடிக்கப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் நேற்று முன்தினமும், நேற்றும் இவ்வாறு மருதமுனை சாய்ந்தமருது மற்றும் கல்முனை பகுதிகளில் பாரை இன மீன்கள் அதிகளவாக பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. பாரை மீன் ஒன்றின் விலை 1,500 ரூபா முதல் 1,800 ரூபா வரை விற்பனையாவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை மலிவான விலையில் கிளவாலட வளையா போன்ற மீன்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இதன்படி வளையா மீன் ஒரு கிலோ 400 ரூபாவாகவும் கிளவால் ஒரு கிலோ 600 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# ஜி20 உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்கு பங்களாதேஷின் பிரதமருக்கு அழைப்பு

அடுத்த ஆண்டு இந்தியாவில்நடைபெறும் ஜி20 உச்சிமாநாட்டில் பங்கேற்க பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா அழைக்கப்படுகிறார்.

பங்களாதேஷின் இந்தியாவுக்கான துணைத் தூதுவர் அண்டலிப் எலியாஸ் இது குறித்துக் கூறுகையில், இந்த உச்சிமாநாடு உலகளாவிய சூழ்நிலையில் முக்கியமானது என்றார்.

ஏ.என்.ஐயுடனான பிரத்தியேக நேர்காணலில், எலியாஸ் கூறுகையில், அடுத்த ஆண்டு இந்தியா நடத்தும் ஜி20 உச்சிமாநாட்டில் பங்கேற்க எங்களுக்கு ஏற்கனவே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நாங்கள் மிகவும் மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் உள்ளோம். நாங்கள் அங்கு அழைக்கப்படுகிறோம். ஜி20 முக்கிய பங்கு வகிக்கும் உலகளாவிய சூழ்நிலையில் இது மிகவும் முக்கியமானது. அத்தோடு, இந்தியாவும் வங்காளதேசமும் அனுபவிக்கும் மேலான உறவை நாங்கள் "அற்புதமான கட்டம்' என்று அழைக்கிறோம்." - என்றார்.

"எனவே, பிரதமர் மோடியின் ஆற்றல்மிக்க தலைமையின் கீழ், உலகில் நாம் காணும் பல்வேறு நெருக்கடிகளைத் தீர்க்க ஜி20 நீண்ட தூரம் செல்லும் என்று நாங்கள் நம்புகிறோம். மேலும் அழைக்கப்பட்ட விருந்தினராக பங்களாதேஷ் உச்சி மாநாடு வெற்றிகரமாக இருப்பதை உறுதிசெய்யும் பங்கை வகிக்கும். - என்று அவர் மேலும் கூறினார்.

டிசம்பர் முதலாம் திகதி ஜி20 தலைவர் பதவியை இந்தியா அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொண்டது. மேலும் டிசம்பர் முதலாம் திகதி தொடங்கும் ஜி20 தலைவர் பதவியின் போது 10 விருந்தினர் நாடுகளில் ஒன்றாக வங்காளதேசத்தை மட்டுமே இந்திய அரசாங்கம் அழைத்தது.

ஜி20 உச்சி மாநாட்டின் போது விவாதிக்கப்படும் பிரச்சினைகள் குறித்த கேள்விகளுக்கு பதிலளித்த எலியாஸ், ஜி20 மேடையில் எந்த பிரச்சினையும் விவாதிக்க மாட்டோம் என்று கூறினார்.

ஜி20 உச்சிமாநாட்டின் போது பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை, ஏனென்றால் நாங்கள் எப்போதும் (விடயங்களில்) ஈடுபட்டுள்ளோம். இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க எங்களுக்கு ஜி20 தேவையில்லை. எங்களிடம் நல்ல உறவுகள் உள்ளன, அண்டை நாடுகளுக்கு இடையே எப்போதும் சில பிரச்சினைகள் இருக்கும், ஆனால் அவற்றை நாங்கள் தீர்க்கிறோம். அதற்கு வேறு நல்ல அண்டை வழிகள் உள்ளன" - என்று அவர் மேலும் கூறினார்.

மேலும், இந்தியா ஜி 20 மாநாட்டை நடத்துவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். மேலும் இரு நாடுகளும் இந்த உச்சிமாநாட்டிற்கு சில நல்ல முடிவுகளை விவாதிக்கவும் பரிந்துரைக்கவும் இந்த தளத்தை நிச்சயமாகப் பயன்படுத்தலாம். - என்றார்.

பங்களாதேஷ் புத்தகக் கண்காட்சியைப் பற்றிப் பேசுகையில், வங்காளதேசத்தின் துணை உயர் ஆணையர், பங்களாதேஷ் புத்தகக் கண்காட்சியின் 10 ஆவது நிகழ்வை டிசம்பர் 2 - 11 வரை கொல்கத்தாவில் உள்ள காலேஜ் தெருவில் நடத்துவதில் மகிழ்ச்சியடைவதாகக் கூறினார். இந்த புத்தகக் கண்காட்சியில் 77 வங்கதேச




பதிப்பாளர்கள் பங்கேற்கின்றனர். கண்காட்சியை கல்வி அமைச்சர் துவக்கி வைத்தார்.

இன்று, இந்தியா தனது ஜி20 தலைமைப் பதவியை 'யுனிவர்சிட்டி கனெக்ட்' நிகழ்வின் மூலம் தொடங்கி, நாடு முழுவதும் உள்ள 75 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்களை ஒன்றிணைத்தது. கோஹிமாவில் நடைபெறும் ஹார்ன்பில் திருவிழா ஜி20 இல் சிறப்பு கவனம் செலுத்துகிறது. சில யுனெஸ்கோ உலக பாரம்பரிய தளங்கள் உட்பட 100 நினைவுச்சின்னங்கள் இன்று சிறப்பாக ஒளிருகின்றன.

(மூலம்:ஏ.என்.ஐ.)

# இந்தியாவின் ஜி - 20 செயல்திட்டங்களுக்கு நாணய நிதியம் முழு ஆதரவு என அறிவிப்பு!

வொஷிங்டன், டிசெ.05

இந்தியாவின் ஜி-20 செயல்திட்டங்களுக்கு முழு ஆதரவு அளிப்பதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்து உள்ளது.

வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளின் கூட்டமைப்பான ஜி - 20யின் தலைமைத்துவத்தை தற்போது இந்தியா அலங்கரிக்கிறது. அதிகாரம் மிக்க இந்த அமைப்பு கடந்த முதலாம் திகதி முதல் இந்தியாவின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்புக்கான கருப்பொருளை இந்தியா வெளியிட்டு உள்ளது. அதன்படி, 'ஒரே பூமி; ஒரே குடும்பம்; ஒரே எதிர்காலம்' என்ற கருப்பொருளை இந்தியா அறிவித்து இருக்கிறது.

ஜி-20 அமைப்பின் தலைவராக இந்தியா பொறுப்பேற்றிருப்பதை உறுப்பு நாடுகள் வரவேற்று உள்ளன. அதைப்போல இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிப்போம் என உறுப்பு நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் அறிவித்து உள்ளன.

**கூட்டுச் செயல்திட்டம்**

அந்தவகையில் இந்தியாவின் ஜி - 20 செயல்திட்டங்களுக்கு முழு ஆதரவு அளிப்பதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்து உள்ளது. இந்த அமைப்பின் திட்டம் மற்றும் கொள்கை மறுஆய்வுத்துறை இயக்குனர் செய்லா பசர்பாசியோக்லு செய்தியாளர்களிடம் கூறியதாவது:-




மிகவும் வளமான எதிர்காலத்திற்காக அவர்கள் (இந்தியா) ஒரு கூட்டு செயல்திட்டத்தை உருவாக்குகிறார்கள். தற்போதைய உலகளாவிய நெருக்கடிகளில் உண்மையில் அவசர கவனம் தேவைப்படும் பிரச்சினைகளில் ஒருமித்த கருத்தைப் பெறுவதற்கான வாய்ப்பாக இதை பயன்படுத்த திட்டமிட்டுள்ளனர். அந்தவகையில் இந்தியாவின் ஜி - 20 செயல் திட்டங்களுக்கு முழு ஆதரவு அளிக்கிறோம். மாநாட்டு பிரகடனம் 'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்ற கருப்பொருளை இந்தியா அறிவித்து உள்ளது. அதாவது வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, உள்ளூர் அளவில், கூட்டாட்சி மட்டத்தில், சர்வதேச அளவில் பணிபுரிய வேண்டியதன் அவசியத்தை இந்தியா முதன்மைப்படுத்துகிறது.

இந்தோனேசியாவில் நடந்து முடிந்த ஜி - 20 உச்சி மாநாட்டு பிரகடனத்தை உருவாக்கியத்தில் இந்தியா முக்கிய பங்காற்றியது. இது ஒரு பெரிய சாதனையாகும். இதில் மிகவும் வலுவான மொழி இருந்தது. பெரும்பாலான உறுப்பினர்கள் உக்ரைனில் போரைக் கண்டித்தனர். டிஜிற்றல் உள்கட்டமைப்பு ஜி-20 செயல் திட்டங்களைத் தொடர்வதுடன், உலகளாவிய சமூகத்திற்கு முக்கியமான முன்னுரிமைகளையும் இந்தியா அறிவித்துள்ளது. டிஜிற்றல் பொது உள்கட்டமைப்பில் இந்தியா முன்னணியில் உள்ளது. நல்ல நிர்வாகத்திற்கு இது மிகவும் முக்கியமானது. மேலும் சமத்துவமின்மை மற்றும் நியாயமான அல்லது வெளிப்படையான பொது வருவாய்கள் மற்றும் செலவுகள் பற்றிய கவலைகள் இருக்கும். தற்போதைய சூழ்நிலையில் இது மிகவும் முக்கியமானது. இந்த டிஜிற்றல் பொது உள்கட்டமைப்பு இந்தியாவின் ஜி-20 தலைமை பதவியின் முக்கிய கருப்பொருளாக இருக்கும். - இவ்வாறு செய்லா பசர்பாசியோக்லு கூறினார்.

# "என் நண்பர் நரேந்திர மோடி எங்களை ஒன்றிணைப்பார்!"

## பிரான்ஸ் அதிபர் நம்பிக்கைச் செய்தி

பாரிஸ்,டிசெ.05

இந்தியாவின் ஜி20 தலைமைப் பதவிக்கு பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் வாழ்த்து தெரிவித்தார்.

இந்தோனேஷியாவில் நடைபெற்ற ஜி20 மாநாட்டின் முடிவில் ஜி20 அமைப்பிற்கு, இந்த ஆண்டு இந்தியா தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளது. இதற்கான மாநாட்டையும் இந்தியா அடுத்த ஆண்டு தலைமை ஏற்று நடத்தவுள்ளது. இந்த பொறுப்பு பிரதமர் நரேந்திர மோடி வசம் ஒப்படைக்கப்பட்டது. இதையடுத்து ஜி 20 மாநாடு அடுத்த ஆண்டு நடந்து முடியும் வரை இந்த தலைமை பொறுப்பு இந்தியா வசம் இருக்கும்.

இந்நிலையில், ஜி 20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள இந்தியாவுக்கு பிரான்ஸ் தனது ஆதரவை தெரிவித்துள்ளது. பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:- ஒரு பூமி.ஒரு குடும்பம்.ஒரு எதிர்காலம். ஜி20 தலைவர் பதவியை இந்தியா கைப்பற்றியது!"

எனது நண்பர் நரேந்திர மோடி, 'உலகில் சமாதானத்தை உருவாக்கிட, அமைதியைக் கட்டியெழுப்ப இன்னும் நிலையான உலகைக் கொண்டு வந்திட எங்களை ஒன்றிணைப்பார்' என நம்புகிறேன் என பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் தெரிவித்தார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நுட்பியல் அவத்தை

## டிஜிற்றல் நாணயம்

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்




நுட்பியல் அவத்தை நளாந்த வாழ்வில் முக்கிய அம்சமாக வளர்ச்சியடைந்திருப்பதற்கு சிறந்த உதாரணமாக டிஜிற்றல் நாணயப் புழக்கத்தைக் குறிப்பிடலாம். எமது அண்டை நாடான இந்தியா சில்லறை வணிகத்தில் டிஜிற்றல் நாணயத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இங்கு, டிஜிற்றல் ரூபாயில் 'புளாக்செயின்' தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது.

உண்மையில் டிஜிற்றல் நாணயம் நாட்டில் புழங்கும் பணத்தை நிர்வகிப்பதற்கான பெரும் செலவைக் குறைக்கிறது. அதாவது, பண நோட்டுகளை அச்சடித்தல், புழக்கத்தில் விடுதல் மற்றும் விநியோகம் செய்வதற்காக ஆகும் செலவைக் குறைக்கிறது.

கிரிப்டோகரன்சிகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் (விநியோக லெட்ஜர்), டிஜிற்றல் ரூபா அமைப்பிலும் பயன்படுத்தப்படுத்தப்படுகின்றது. ஆனால் டிஜிற்றல் நாணயம் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

இங்கு மத்திய வங்கி டிஜிற்றல் நாணயத்தை வெளியிடும். வணிக வங்கிகள் அதை விநியோகிக்கும். டிஜிற்றல் ரூபாயின் சில்லறை பதிப்பு, டோக்கன் அடிப்படையிலானதாக இருக்கும். மின்னஞ்சல் இணைப்பு பெறப்படும். அதில் உள்ள கடவுச்சொல்லைப் பயன்படுத்தி பணம் அனுப்ப முடியும்.

இந்தச் நுட்பியல் அவத்தையால் எதிர்காலத்தில் வங்கி செயல்பாடுகள் முடங்கும் அபாயம் உள்ளதும் குறிப்பிடப்படுகின்றது. வெளிநாடுகளில் பணிபுரிந்து டிஜிற்றல் பணமாக சம்பளம் பெறுபவர்கள் அதன்மூலமாக குறைந்த கட்டணத்தில் தங்கள் உறவினர்களுக்கோ அல்லது பிற நாடுகளில் வசிப்பவர்களுக்கோ பணத்தை இலகுவாகப் பரிமாற்றம் செய்ய முடியும்.

100க்கும் மேற்பட்ட நாடுகள் டிஜிற்றல் நாணயம் அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதாக அறியப்படுகின்றது. தற்போது நைஜீரியா, ஜமைக்கா உள்ளிட்ட பத்து நாடுகள் டிஜிற்றல் கரன்சியை அறிமுகப்படுத்தியுள்ளன. சீனா 2023,ல் டிஜிற்றல் நாணயத்தை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது.

டிஜிற்றல் நாணயம் என்ற எண்ணம் கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்திற்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட அதே வேளையில், புளாக்செயின் அடிப்படையிலான நெட்வொர்க்குகளின் மேல் டிஜிற்றல் நாணயங்களை அறிமுகப்படுத்த மத்திய வங்கிகளிடையே ஆர்வம் அதிகரித்து வருகிறது.

உலகெங்கிலும் உள்ள மத்திய வங்கிகள் டிஜிற்றல் நாணயங்களில் அதிக ஆர்வம் காட்டுகின்றன் 86% மத்திய வங்கிகள் இப்போது டிஜிற்றல் நாணயங்களின் நன்மைகள் மற்றும் குறைபாடுகளை ஆராய்ந்து வருகின்றன.

டிஜிற்றல் நாணயத்தில் மூன்று வகைகள் உள்ளன:

1. Cryptocurrency
2. Stablecoins
3. Central Bank Digital Currency (CBDC)




மிகவும் பிரபலமான கிரிப்டோகரன்சி பிட்காயின் ஆகும். பிட்காயினின் பரவலாக்கப்பட்ட புளாக்செயின் நெட்வொர்க் 2009 இல் நேரலைக்கு வந்தது.

இலங்கையிலும், கிரிப்டோகரன்சி மற்றும் டிஜிற்றல் நாணயங்களின் பிற முறைகள் குறித்து குறிப்பிடத்தக்க பரபரப்பு உள்ளது. இன்று, புதிய கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளுக்கு களம் அமைக்கும் பரிந்துரைகளின் தொகுப்பை வகுக்க இலங்கை மத்திய வங்கி முதல் நீதி அமைச்சு தொடர்புடைய நிறுவனங்கள் பாடுபடுகின்றன.

டிஜிற்றல் நாணயத்தைப் பொறுத்தளவில் சரியான அணுகுமுறை இலங்கை நாணயச் சபையால் தீர்மானிக்கப்பட வேண்டும். பணவியல் கொள்கைகளில் இந்த நவீன போக்குகளின் தாக்கம் குறிப்பிடத்தக்கது. இன்று நுட்பியல் அவத்தை வேகமாக நகர்கிறது, ஆனால் கொள்கை வகுப்பாளர்கள் தொழில்நுட்பத்திற்கு பின்னால் இருக்கிறார்கள் அதோடு ஓடமுடியாமல் திண்டாடுகிறார்கள். பாதுகாப்பு மற்றும் தனியுரிமை சவால்களுடன் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்குப் பின்னால் சட்டங்களும் கொள்கை நடவடிக்கைகளும் துரிதப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

ஏதிர்காலத்தில் இலங்கையின் பணவியல் கொள்கை மெய்நிகர் நாணயங்களின் அடிப்படையில் அமைந்த நுட்பியல் அவத்தையால் சூழப்படும் எனலாம்.




Adaptation from Bank for International Settlements (2017)

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## வில்லுக் குளத்துப் பறவை



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 201**



உண்மை கதைகளின் தொகுதியாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவு ஆடி1995இல் வெளியிட்ட 'வில்லு குளத்துப் பறவை' என்ற இந்த நூலின் பிரதியை வாசகர் ஒருவர் எதுவித குறிப்போ கருத்தோ இன்றி தற்பொழுது அனுப்பி இருந்தார்.

இந்திய ஒப்பந்தத்தைப் பற்றியும் இந்திய படைகளைப் பற்றியும் நான் பதிந்தவற்றுக்கு இந்த உண்மைகளையும் சேர்த்து வாசித்துத் தெரிந்து கொள்ளுங்கள் என்பது அனுப்பியவரின் அபிப்பிராயம் என ஊகித்தேன்.

அதன் பதிப்புரையில் இந்திய ஆக்கிரமிப்பு காலகட்ட அவலங்களையும், ஸ்ரீலங்கா இராணுவக் கொடூரங்களையும் சித்திரிக்கும் தொகுதி ஒன்றை 'அம்மாளைக் கும்பிடுறானுகள்' என்ற பெயரில் ஏற்கனவே வெளியிட்டதாகவும், இந்திய ஆக்கிரமிப்பு காலகட்டத்தின் உண்மை நிகழ்வுகளே கதை வடிவில் உணர்வுபூர்வமாக பதியப்பட்டுள்ளன எனவும், அமைதிப்படை ஓநாய்களின் வேட்டைக்குப் பலியான அப்பாவி மக்களின் கதைகள் – போராட்டத்தை நெஞ்சார நேசித்து செயற்பட்டதில் தம்மை பலியாக்கிய மக்களின் கதைகள் – போராளிகளை நேசித்து அவர்களைக் காப்பாற்ற துணிவுடனும் சாதுரியத்துடனும் செயற்பட்ட மக்களின் கதைகள் எனவும் கூறப்பட்டுள்ளது

அவற்றை வாசித்ததில், உண்மையின் அடிப்படையில் உணர்வுபூர்வமான ஒரு சிந்தனைப் பூட்டுக்காக வரையப்பட்டவை எனத் தெரிந்தேன்.

இவற்றைப் படித்த போது சில நாள்களுக்கு முன் மனோ கணேசன் தெரிவித்த கருத்துக்களில், "தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள ஆக்கபூர்வமான வழிகளை முன்னெடுக்க வேண்டும். நடந்தவை யாவற்றுக்கும் பிறரைக் குறை சொல்லாமல், அவர்களைக் கரித்துக் கொட்டாது, முதலில்




சுய விமர்சனம் செய்ய ஆரம்பியுங்கள், விடை கிடைக்கும் ராஜீவ் அனுப்பி வைத்த ஐ.பி.கே. எவ். இங்கே கொலைகள், பாதகங்கள் செய்யவே இல்லை என நான் கூற வரவில்லை" என்று கூறியமைதான் நினைவோடியது.

நான் கூட இந்தியப் படைகள் அட்டூழியங்கள் செய்யவில்லை என்று கூறவும் இல்லை, வில்லுக்குளத்துப் பறவைத் தொகுப்பில் இருந்த புனைவுகளின் ஆதாரங்களின் உண்மை தன்மைகளை கேள்விக்கு உள்ளாக்கவுமில்லை.

நான் கூட அகதி அந்தஸ்துக்காக என்னை அணுகியவர்களுக்கு ஆயிரத்திற்கும் மேலான புனை கதைகளை குடிவரவு திணைக்களத்துக்கு எழுதியவன்தான். அவை திணைக்கள அதிகாரிகளின் உணர்வுகளைத் தொட்டு, அவர்கள் ஸ்ரீலங்காவின் பின்னணியில் விண்ணப்பதாரர்களை அகதியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கம் முன் நின்றது. ஆனால் நெஞ்சுக்கு அவர்கள் பட்ட உண்மையான அவஸ்தைகளும் தெரிந்திருந்தது. ஏனெனில் பலர், தாங்கள் பலாத்காரப்படுத்தப்பட்டவர்கள் என மிகைப்படுத்தியே கூறியவர்கள். அகதி முடிவுகள் இழுபட்டால், இந்த விண்ணப்பகாரர்களே அந்தப் புனைகதையை நேர்முகத் தேர்வுகளுக்கு அடிக்கடி படித்ததால், அது தங்களுக்கு உண்மையாக நடந்தது என்று மனதார நம்பி, இவ்வளவு அட்டூழியங்களுக்கும் பலாத்காரத்துக்கும் தாங்கள் அகப்பட்டும் ஏன் அந்தஸ்து கிடைக்கவில்லை என ஆத்திரப்படுவதை பார்க்கும் போது வியப்பாக இருக்கும்.

அதேபோன்று அரசியல் நிலைகள் மாற, அதற்கு ஏற்புடையதாக சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களில் தன்மைகளில் இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராடியது தற்காப்பாகவும், பின் இந்தியப் படைகள் செய்தது ஆக்கிரமிப்பாகவும்,அவர்கள்இருக்கும்போதும் பின்னரும் நடந்த இயக்க மோதல்கள் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்றவாறு குற்றம்சாட்டி சொல்லப்பட்டு, சர்வதேச நாடுகளில் அகதி அந்தஸ்துக்காக பதியப்பட்ட ஆவணங்கள் அந்த அரசுகளாலும் அவற்றின் தன்மைகளை ஒட்டி ஆராயப்பட்டு அபிப்பிராயங்கள் எடுத்துக்கொள்ள வழிவகுத்தன.

அகதி அந்தஸ்துகளிலேயே சர்வதேச நாடுகளுக்கும் சர்வதேச சட்டங்களுக்கும் சவால் கொடுத்தவர்கள் தமிழ் மக்கள். இன்றும் ஆஸ்திரேலியா, வியட்நாம், ஐஸ்லாந்து, ஆபிரிக்கா என்று பல நாடுகளில் அந்த சவால்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் அனுதாபங்கள் வற்றிய நிலையில், முறையான அரசியல் நடப்புகள் அவர்கள் நாடுகளிலேயே இல்லாதமையால், இவர்களை அரசியல் அகதிகளாகக் கணிக்காது பொருளாதாரத்திற்காக வெளியேறுபவர்களாக பார்த்தாலும், இவர்கள் எப்படியாவதும் வெளியேறி, துரும்பைப் பிடித்தாவது கரையேறி, கடல் கடந்தும் திரவிய தேட வேண்டும் என்று ஆதங்கம்.

வீணையின் தந்திகளையோ, நாதஸ்வரத்தில் சுரங்களையோ உடம்பின் உரோமங்களே சிலிர்த்தெழுந்து உணர்வு ஊட்டிய மனோ நிலைக்கு கொண்டு செல்லலாம். மாற்றாக மன அமைதிக்கும் சாந்தத்துக்கும் ஆகும் நிலையையும் ஊட்டலாம். (கருவியை) வாசிப்பவரின் நோக்கங்களைப் பொறுத்தது விளைவு.

போர், கலவரக் காலங்களில் கற்பழிப்புகள், பலாத்காரங்கள் என்பவை வழமையானவை. தவிர்க்க முடியாதவை. அதேபோல் இவை பிரசாரங்களுக்காக எல்லாவிதப் போராட்டங்களிலும் கச்சிதமாக வளர்த்தெடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்திய படைகள், மக்கள் குடியிருப்புக் கிராமங்களுக்குள் போரின் தொடக்க நாள்களில் முன்னேறிய போது, விடுதலைப் புலிகள் தங்களது ஆயுதங்களை அந்தப் பகுதிகளில் இருந்து அகற்றிவிட்டு, மக்களையும் வெளியேறக் கூறி, அவர்களில் கூடி வந்தவர்களை அழைத்துக் கொண்டு சென்று விட்டமையால், வெளியேறாதவர்களில் அந்த கிராமங்களில் சிக்குண்டவர்கள் இந்தியப் படைகள் தங்களுக்கு ஒன்றும் செய்யாது, ஆங்கிலத்திலாவது கதைத்து, விளங்கப்படுத்தலாம் என்று நம்பி இருந்தவர்கள் கூட, கேள்விகள் எதுவும் இல்லாமல் சுடப்பட்டனர். இவை பற்றியும், உடுவில் பகுதிகளில் சில பெண்கள் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்ற செய்திகள் தமிழ்நாட்டில் தமிழர் தகவல் நிலையத்துக்குச் சென்று சேர, அந்தச் செய்தி பிரசாரமாகி, இன்றுவரை இந்திய படையினரின் கண்மூடித்தனமான கற்பழிப்புகளுக்கு முண்டு கொடுக்கிறது. செய்தியைப் பெற்று, அதைப் பதிந்து, புதுடெல்லி தொடர்புகளுக்கும் மற்றவர்களுக்கும் அனுப்ப புறப்பட்ட வேளையில், ஈழ விடுதலைக்கு ஆதரவான முக்கிய அரசியல் புள்ளி அந்தச் செய்தியைப் படித்துவிட்டு "என்ன மண்ணாங்கட்டி ஐந்து பேர் என்ற எழுதுகிறீர்கள். இதை பார்ப்பவன் தூக்கி எறிந்து விட்டுப் போவான். ஐந்நூறு பேர் என்று போடுங்கள்!" எனப் பதிவிடுபவரின் மேல் தனது ஆளுமையால் அதிகாரம் செலுத்த, அதுவே அந்தக் குழப்பமான நாளில், செய்தியாகச் சென்றது. சில மணித்தியாலங்களுக்குள் இது கால்கள், கைகள் வைத்துப் புலம்பெயர் ஊடகங்களில் வலம் வந்தது. பலாத்காரப் பிரச்சாரமானது. அப்படியான அட்டூழியங்கள் நடக்கவில்லை என்றதான கருத்தாக்கங்களை ஏற்படுத்தவும் இதை குறிப்பிடவில்லை என்பதை நினைவில் கொள்ளவும். இந்தச் செய்தியின் தாக்கங்கள் இந்திய அரசின் மட்டத்திலும், இராணுவ வட்டத்திலும் அதிர்வலைகளை ஏற்படுத்தின. அமைதிப்படையாகச் சென்ற இந்திய இராணுவம் மூன்று தினங்களுக்குள் ஐந்நூறுக்கு மேல் பெண்களைப் பலாத்காரப்படுத்திக் கற்பழித்தது என்றால் அது ஏற்றுக் கொள்ளக்கூடிய சாமானிய விடயம் இல்லை.

இராணுவத்தின் தென் மாநிலக் கட்டளை தளத்திலிருந்து மேஜர் பரமேஸ்வரன் தலைமையில் சிலரை இவை பற்றி விசாரிப்பதற்காக உடனடியாக அனுப்பி வைத்தார்கள். அவர்கள் சம்பவம் நடந்த வீடுகளுக்குச் சென்று பாதிப்படைந்தவர்களைச் சந்தித்து, விவரங்களை சேகரிக்க உடுவிலிலிருந்த ஒரு சமூக சேவையாளரின் உதவியைப் பெற்றிருந்தனர். இரண்டு நாள்களின் பின் சமூக சேவையாளரிடம் வந்த விடுதலைப் புலிகள், அவரை இந்த விசாரணைகளில் தொடர்ந்து ஒத்துழைக்காது விடவும், மீறினால் நடவடிக்கையை எதிர்கொள்ள வேண்டும் எனவும் எச்சரிக்கைகள் தந்தார்கள். அது மட்டுமல்ல, உடுவில் தெருவில் பயணித்த மேஜர் பரமேஸ்வரனின் வாகனத்திற்குப் பாதையோர குண்டு வைத்து அவரும் சாகடிக்கப்பட்டார்.

உண்மைகளும் புனைவுகளும் ஆக்கும் குயவனின் கைகளிலேயே இருக்கின்றன.

அந்தக் காலங்களில் மனித உரிமை மன்




றுக்கோ, மற்றைய மனித உரிமைக தரப்புகளுக்கோ வைக்கப்பட்ட சமர்ப்பணங்களில் இவ்வளவு தொகையானவர்களின் பலாத்காரத்தின் விவரங்கள் பதியப்படவில்லை. ஆனால் அந்த செய்திகளை ஏற்படுத்திய நினைவுகள் நீங்கவில்லை.

### சுய விமர்சனம்

தமிழ் மக்கள் தங்களது இதுவரை கால அரசியலை சுய விமர்சனங்களில், மீளாய்வு செய்து, அதிலிருந்து பாதைகள் வகுக்க வேண்டும் என அடிக்கடி பதிந்து இருக்கிறேன்.

இது , இதுவரை நடந்த அரசியலின் ஒட்டுமொத்த விமர்சனமே ஒழிய, தனி மனித குரோதங்களின் விமர்சனங்கள் அல்ல. ஐரோப்பாவில் இருக்கும் நண்பர் தந்த தரவுகளை பார்த்தால், தனிமனித குரோதங்களின் வெளிப்பாடாகவே இருக்கிறது. அதனை நாளை பார்ப்போம்.

(வளரும்....)

காலைக்கதிர் Kalaikkathir

## கடற்றொழில் அமைச்சர் ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடற்றொழில் மக்களின் எதிர்ப்புக்களை மீறி கடலட்டை பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. இது ஏன்? கடலட்டை பண்ணைகளை மட்டுப்படுத்தி வழங்குங்கள். மக்கள் தொழில் செய்யும் இடங்களில் எல்லாம் கடலட்டை பண்ணை அமைத்தால் மக்கள் எங்கு தொழில் செய்வது? - என்றார்.

## என்ன செய்யப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டை தவறாக வழிநடத்தினர் எனவும், இவ்வாறான நிலையில் நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் கேள்வி எழுப்பினார்.

யார் என்ன சொன்னாலும் சர்வதேச, உள்நாட்டு கவனம் இந்த விடயத்தில் செலுத்தப்படவில்லை, அமெரிக்கா தலைமையிலான பல மேற்கத்திய நாடுகள் எமது நாட்டில் அரசியல் மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும் வரை எந்த வித உதவிகளையும் செய்வதில்லலை எனக் கூறியுள்ளமையை நினைவுகூர்ந்த எதிர்க்கட்சித் தலைவர், 8 மாதங்களில் 477 மருத்துவர்களும் 300 பொறியியலாளர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் எனவும், குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து வருவதாகவும், சுகாதாரத்துறையில் மருந்துகள் பற்றாக்குறை உள்ளிட்ட பல பிரச்சினைகள் நிலவி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த அனைத்துப் பிரச்சனைகளுக்கும் ஒரே தீர்வு தேர்தல் மூலம் புதிய மக்கள் ஆணையைப் பெறுவதுதான் எனவும் தெரிவித்தார்.

## கடற்றொழில் சமூகத்தில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்கள், சமாசங்கள், சம்மேளனம் என்பன கூட்டாக வலியுறுத்தின.

யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவை இதனைத் தெரிவித்தன.

அவை சார்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு :-

சட்டவிரோதகடலட்டைபண்ணைகள் அமைக்கப்பட்ட இடங்களுக்கு மக்கள் பிரதி நிதிகள் நேரடியாக சென்று பார்வையிட்டு அதற்கெதிராக குரல் கொடுக்க வேண்டும். சட்டவிரோத கடற்றொழிலை தடுக்க ஏன் கடற்படையால் முடியாதுள்ளது?மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் இது தொடர்பாக முறையிட்டோம்.

அனலைதீவு, பருத்தித்தீவுப் பகுதியில் ஒரிருவருக்குகடலட்டைபண்ணைகளை வழங்கினால் அங்கு இதுவரை காலமும் தொழில் செய்த 700 தொழிலாளர்களும் என்ன செய்வது?

கடலட்டை பண்ணை உருவாக்கப்பட்ட பின்னர் வீச்சு வலை தொழிலாளர்கள், அடிவலை தொழிலாளர்கள், இறால் பிடியை மேற்கொள்வோர் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் பிரதிநிதிகள் தேர்தல் நேரத்தில் வீடுகளை தேடி வருகிறார்கள். ஆனால் மக்களுக்கு பிரச்சினை ஏற்படும்போது யாரும் வருவது கிடையாது. கடற்றொழிலாளர் சமூகத்திற்கு பிரச்சினை வரும் போது பலரும் பார்வையாளர்களாக இருக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட அரசியல்வாதிகளுக்கு கண் இல்லையா? மக்களுக்கு தீர்வு வழங்கும் எண்ணம் இல்லையா? பொலிஸார் போராட்டகாரர்களை அச்சுறுத்துகின்றனர்.

இவ்வளவு காலமும் யார் கடலட்டையைபிடித்து அந்நியச்செலாவணியை வழங்கியது? தற்போது மட்டும் முதலாளிகளுக்கு கடலட்டை பண்ணை அமைக்க அனுமதி வழங்கப்படுகிறது. சட்டத்தரணிகளுக்கும் வாகனத்தில் வந்து இறங்குபவர்களுக்கும் கடலட்டை பண்ணை அமைப்பதற்கான அனுமதி வழங்கப்படுகிறது. - என்று தெரிவிக்கப்பட்டது.

ஊடக சந்திப்பில், மெலிஞ்சிமுனை கடற்றொழிலாளர் சங்கம் சார்பில் மடுத்தீஸ் பெனடிக்ற், வல்வெட்டித்துறை ஆதி கோவிலடி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க செயலாளர் இ.மதியழகன்,

ஊர்காவற்றுறை பிரதேச கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனம் தலைவர் சி.சிவசெல்வன், புங்குடுதீவு நசரத் கடற்றொழிலாளர் சங்கம் சார்பாக ஜோசப்தாசன் ரவி, யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளன உபதலைவர் நா.வர்ணகுலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பிறந்தநாளுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோப்பாய் பகுதியில் வசிக்கும் இந்த சட்ட வைத்திய அதிகாரி தனது கடமையின் நிமித்தம் நேற்றைய தினம் சனிக்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் காரில் சென்று கொண்டிருந்த வேளை, கோப்பாய் நாவலர் பாடசாலை முன்பாக பருத்தித்துறை வீதியை மறித்து, மோட்டார் சைக்கிளில் நின்ற இளைஞர்கள் குழுவொன்று பிறந்தநாளைக் கொண்டாடிய வண்ணம் இருந்துள்ளனர்.

இளைஞர்கள் குழுவின் பிறந்தநாள் கொண்டாடத்தினால், அவ்வீதியூடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டு இருந்தது. அதனால் சட்ட வைத்திய அதிகாரி தனது கடமைக்கு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டதோடு வாகனத்தின் பக்க பார்வை கண்ணாடியும் உடைக்கப்பட்டுள்ளது. இவை தொடர்பில் அவர் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து வீதியை மறித்து பிறந்த தின கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்த 10 இளைஞர்களை கைது செய்தமையுடன், அங்கு நின்ற இரண்டு மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களை கோப்பாய் பொலிஸார் நேற்று மாலை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர். அவர்களை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

## கூட்டமைப்பின் சேர்ந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலைப்பாட்டை தமிழ் முற்போக்கு கூட்டணி வரவேற்கிறது என கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இதுபற்றி மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பு மற்றும் கருத்து இன்னமும் முழுமையாக தெளிவுபட எமக்கு கிடைக்கவில்லை. நாடாளுமன்றக் கருத்துப் பகிர்வுடன் அது நிற்கிறது. மாகாணசபை, பதின்மூன்று 'ப்ளஸ்' என்று ஆரம்பித்து விட்டு, இடையில், மாவட்ட சபை என்றும் ஜனாதிபதி ரணில் கூறினார். பின்னர் மாகாணசபைக்கு மாற்றீடாக மாவட்ட சபையை ஜனாதிபதி கூறவில்லை என்று அவரது அலுவலகம் விடுத்துள்ள விளக்கம் கூறுகிறது.

முப்பது வருட கோர யுத்தம் காரணமாக கடும் மனித உரிமை மீறல்களை வடகிழக்கு உடன்பிறப்புகள் சந்தித்துள்ளார்கள். வரலாற்றில் பண்டா - செல்வா, டட்லி - செல்வா, இலங்கை - இந்திய ஒப்பந்தங்களிலும், சந்திரிக்கா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் வெவ்வேறு காலகட்டங்களில் வடக்கு, கிழக்கு தமிழ் தலைமைகளுடன் நடத்திய பேச்சுகளின் போதும், ஈழத்தமிழ் தேசிய இனத்தின் உள்ளக சுயநிர்ணய உரிமை வெவ்வேறு வார்த்தைகளின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

ஆகவே இந்த அடிப்படைகளில் தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசுடன் நடத்தும் பேச்சுகளுக்கு நாம் எமது தார்மீக ஆதரவை எப்போதும் வழங்கி வந்துள்ளோம். இனியும் வழங்குவோம். நாம் ஒருபோதும், பேரினவாதத்துக்கு துணைபோய், ஈழத்தமிழ் உடன்பிறப்புகளின் தேசிய அபிலாசைகளுக்கு இடையூறாக இருக்க மாட்டோம் என்பதை தமிழ் தேசிய கூட்டமைப்பு நண்பர்கள் நன்கறிவார்கள்.

அதேவேளை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே நிலவும் தென்னிலங்கை களநிலைமைகளுக்கு ஏற்ப எமது அரசியல் கோரிக்கைகள் மாறுபடுகின்றன. இதுபற்றிய தெளிவான புரிதல் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு இருக்கின்றது என்பதை நான் நன்கறிவேன். சிவில் சமூகத்துடனான தீவிர கலந்துரையாடலுடன் தமிழ் முற்போக்கு கூட்டணி தயாரித்துள்ள, இந்திய வம்சாவளி மலையக தமிழரின் தேசிய அரசியல் அபிலாஷைகள் மற்றும் நிலவரம்பற்ற சமூக சபை ஆகிய கோரிக்கைகள் உள்ளடங்கிய ஆவணத்தை நாம் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வழங்கி, அதற்கான அவர்களது தார்மீக ஆதரவையும் கோர விரும்புகிறோம்.

சகோதர இனங்கள், பரஸ்பரம் ஒன்றுக்கொன்று தார்மீக ஆதரவை வழங்கும் அதேவேளை, தத்தம் கள நிலைமைகளுக்கு ஏற்ப மாறுபட்ட கோரிக்கைகளுடன் அரசுடன் உரையாடுவதே சரியானது. தென்னிலங்கையில் நாம் முன்வைக்கும் கோரிக்கைகளை காரணமாக கொண்டு, ஈழத்தமிழ் கட்சிகளின் தேசிய கோரிக்கைகளை நிராகரிக்கவோ அல்லது, வடகிழக்கு தமிழ் கட்சிகளின் கோரிக்கைகளை காட்டி எமது தேசிய கோரிக்கைகளை நிராகரிக்கவோ அரசாங்கத்துக்கு சந்தர்ப்பம் வழங்க கூடாது. எமக்கிடையே பிளவுகள் இருப்பதாக காட்டி, அரசு விளையாட நாம் இடம் கொடுக்கவும் கூடாது. அரசாங்கத்தை அந்த ராஜதந்திரத்துடன் அணுகும் நடைமுறையை கூட்டமைப்பு, கூட்டணி ஆகிய வற்றுக்கு இடையில் நடைபெறும் பேச்சுகள் தீர்மானிக்க வேண்டும்.






காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். நகர அபிவிருத்தி ஊழல்களை மூடிமறைக்க மாநகர சபைக்கு இலஞ்சம் வழங்கப்பட்டுள்ளதா?

## நாடாளுமன்றில் கஜேந்திரன் எம்.பி. கேள்விக்கணை

யாழ். நகர அபிவிருத்தியில் கொழும்பிலுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை தலைமையகம் பாரிய ஊழல் செய்துள்ளதாகவும் அதனை மூடி மறைப்பதற்கு யாழ். மாநகர சபை நிர்வாகத்துக்கு இலஞ்சம் கொடுக்கப்பட்டுள்ளதா? என நாடாளுமன்றத்தில் செல்வராஜா கஜேந்திரன் எம்.பி. கேள்வியெழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

தந்திரோபாய நகர அபிவிருத்தி திட்டத்தின் (Stertagic City Development Project) கீழ் இலங்கையில் மூன்று முக்கியமான நகரங்களை அபிவிருத்தி செய்வதற்காக உலக வங்கியால் கடந்த காலத்திலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

அந்த வகையில் யாழ்ப்பாணம் நகர அபிவிருத்திக்காக 5 கோடியே 50 லட்சம் அமெரிக்க டொலர்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிதியில் இருந்து 187 கோடி ரூபா வடிகால் அமைப்புக்காக முன்னாயத்த திட்ட வரைவு தயாரிப்பு மற்றும் வடிகால் அமைப்பு வேலைத் திட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்த நிதியிலிருந்து யாழ். நகரத்துக்கான வடிகால் அமைப்பு முன்னாயத்த திட்ட வரைவு தயாரிப்பதற்கான ஒப்பந்தம் கொழும்பில் இருக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபை தலைமையகத்தாலேயே கொழும்பில் இருக்கக்கூடிய தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது.

மேற்படி ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்ட தனியார் நிறுவனம், யாழ்ப்பாணம் நகரத்துக்கான வடிகால் அமைப்பு முன்னாயத்த திட்ட வரைவு தயாரிக்கின்ற பொழுது அதற்குத் தேவைப்படுகின்ற மிக முக்கியமான தரவுகளான மழை வீழ்ச்சித் தரவுகள் மற்றும் தரை உயர தரவுகள் இரண்டும் இல்லாமல் ஒரு போலியான ஒரு வடிகாலமைப்பு முன்திட்ட வரைவு ஒன்றைத் தயாரித்திருந்தது.

அந்தத் தவறான தரவுகளுடன் தயாரிக்கப்பட்ட Master plan அடிப்படையிலேயே அதற்கு அடுத்த கட்ட நடவடிக்கைகள் அனைத்தும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. வடிகாலமைப்பு முன்னாயத்த திட்ட வரைவு தயாரிப்பதில் பாரிய ஊழல் நடைபெற்றுள்ளது. அவ்வாறு தயாரிக்கப்பட்ட தவறான முன்னாயத்த திட்ட வரைவை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட வடிகால் அமைப்பு கட்டுமானப் பணிகளிலும் பாரிய ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், டிசெம்பர் மாதம் நடைபெற்ற யாழ்ப்பாணம் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட செயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலும் அம்பலப்படுத்தி இது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று கோரியிருந்தேன்.

2020 நவம்பர் மாதம் நாடாளுமன்றத்திலும் இந்த விடயங்கள் தொடர்பாக நான் அம்பலப்படுத்தி, இது தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தேன். எனினும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. அதனால் கடந்த 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இடம்பெற்ற வரவு – செலவுத் திட்டத்தின் விவாதத்தின் போதும் இந்தப் பிரச்சினையை நான் அம்பலப்படுத்தி இது தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் கோரியிருந்தேன். அத்துடன் யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான வடிகாலமைப்பு முன்னாயத்த திட்ட வரைவு ஒன்று முழுமையாக தயாரிக்கப்பட வேண்டும், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தேன்.

அது மட்டுமன்றி நவம்பர் மாதம் நடைபெற்ற நகர அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் வீடமைப்பு அமைச்சின் நாடாளுமன்ற ஆலோசனை குழு கூட்டத்திலும் இந்தப் பிரச்சினை தொடர்பாக நான் வெளிப்படுத்தி முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தேன். அப்பொழுது ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த அமைச்சு சார்ந்தவர்கள் அந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு அறிக்கை தரப்படும் என்று உறுதியளித்திருந்தார்கள். ஆனால் இன்று வரை என்ன நடந்தது என்பது தொடர்பாக எந்தத் தகவலும் தரப்படவில்லை.



இந்த ஊழல் தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படாத காரணத்தால் இரண்டு ஆண்டுகள் கடந்த பின்னரும் இன்று இடம்பெறுகின்ற நகர அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் வீடமைப்பு அமைச்சினுடைய இன்றைய குழுநிலை விவாதத்திலே நான் மீண்டும் இந்தப் பிரச்சினையை அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்.

இது தொடர்பாக ஒரு முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும். உங்களுடைய அரசாங்கத்திலே முக்கிய அமைச்சராக இருக்கிற டக்ளஸ் தேவானந்தாவுடைய ஈ.பி.டி.பி. அமைப்பின் ஆளுகையிலே யாழ்ப்பாண மாநகர சபை இருக்கின்றது. அந்த மாநகர சபையினுடைய முக்கியஸ்தர்கள் கொழும்பிலுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையினுடைய தலைமையகத்துடன் இணைந்து இந்த ஊழலை மூடி மறைப்பதற்குத் துணை நிற்கின்றார்கள். இந்த ஊழலை மூடி மறைப்பதற்காக யாழ். மாநகர சபையினுடைய முக்கியஸ்தர்களுக்குப் பெருந்தொகை பணம் இலஞ்சமாக கொடுக்கப்பட்டதா என்கின்ற ஒரு சந்தேகம் மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. – எனத் தெரிவித்தார்.

# சுத்தமான குடிதண்ணீர் வழங்கும் திட்டம் மன்னாரில் திறந்து வைப்பு!



மன்னாரில் சுத்தமான குடிதண்ணீர் வழங்கும் திட்டம் மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) ஐ.எஸ்.ஆர்.சி. தனியார் தொண்டு நிறுவனத்தின் அனுசரணையில் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மடுக்கரைப் பகுதியில் சுமார் 30 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் வேண்டுகோளின் பேரில் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோகத் திட்டம் அமைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஐ.எஸ். ஆர்.சி. நிறுவனத்தின் பணிப்பாளர் மொஹமட் சயாப், ஐ.எஸ்.ஆர்.சி. நிறுவனத்தின்ஸ்தாபகரும்முஸ்லிம்ஹேண்ட்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளருமான ஜனாப் மிஹ்லார் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# சட்டம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான செயலமர்வு

சட்டம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான செயலமர்வு ஒன்று இடம் பெற்றுள்ளது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முத்தமிழ் சனசமூக நிலையத்தில் இடம் பெற்றது.

சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிறுவனத்தால் இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டது. இதில் சட்டத்தரணி கார்த்திகா கலந்துகொண்டார். மேலும் இந் நிகழ்வில் சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிறுவனத்தின் செயற்பாட்டாளர் ரொஹான் முத்தமிழ் சனசமூக நிலையத்தினர் மற்றும் இளைஞர்கள் யுவதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் துறைமுகங்களுக்கு 2,400 கோடி ரூபா லாபம்

## நிமல் சிறிபால டி சில்வா தகவல்

துறைமுகம் இலாபகரமான நிறுவனமாக மாறியுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் துறைமுகம் 2 ஆயிரத்து 400 கோடி ரூபா லாபத்தை ஈட்டியுள்ளது.



மேலும் எதிர்காலத்தில் 6 பயணிகள் கப்பல்கள் இலங்கைக்கு வரவுள்ள என எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# மின்சாரக் கட்டணத் திருத்தம் தேவையில்லை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.05

மின்சாரக் கட்டணத்தை திருத்துமாறு மின்சார சபை கோரவில்லை எனவும் தற்போது கட்டண திருத்தம் தேவையில்லை எனவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பாக மின்சார சபை மற்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பல்வேறு முரண்பாடான கருத்துக்களை முன்வைத்து வந்தன.

இந்த நிலையில், இது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு இடம் பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்னாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் – தற்போதைய, அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் ஜனவரி மற்றும் ஜுன் மாதத்தில் கட்டணத்தை அதிகரிக்க அனுமதிவழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்தால் காலநிலை மாற்றத்துடன் பாரிய சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியேற்படும்.

மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை ஈடுசெய்யும் வகையில் இந்தக் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்படுவதாக கூறப்படுகிறது. கட்டணத்தை அதிகரிப்பதால் அதனை செய்யமுடியாது. – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சுற்றுலா வீசாவில் ஆள்களை அனுப்பிய 400 வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின் உரிமங்களுக்குத் தடை!

கொழும்பு, டிசெ. 05

சுற்றுலா வீசாவில் ஆள்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிய 400 வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின் உரிமையாளர்களின் உரிமம் தடை செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

டொலர்கள் இன்றி உண்டியல் வடிவில் பணத்தைக் கொண்டு வந்த பல வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களும் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொழில்துறை அமைச்சின் வரவு – செலவுத் திட்டம் மீதான வரவு செலவுத் திட்ட குழு விவாதத்தின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.12.2022இல் வெளியிடப்பெற்றது.